# பாம்புக் கடி

உனக்குப் பிடிக்காத காரியத்தை உன் பெற்றோர் உன்னிடம் செய்யச் சொன்னது உண்டா? ஏன் அவ்வாறு சொல்லுகிறார்கள் என்று உனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனாலும், உன் பெற்றோர் உனக்கு நல்லதைத்தான் சொல்வார்கள் என்று நீ நம்புவதால் கீழ்ப்படிகிறாய். இஸ்ரவேலர்கள் என்ன செய்தார்கள் என்று பார்ப்போமா?

தேவனுடைய மக்கள் 40 வருடங்களாக வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருந்தார்கள். தேவன் வாக்குப்பண்ணிய கானான் தேசத்தின் அருகில்தான் இஸ்ரவேலர் இருந்தார்கள்.

ஆனாலும், இஸ்ரவேலருடைய கீழ்ப்படியாமை, அவிசுவாசத்தினிமித்தம் தேவன் அவர்களை மீண்டும் வனாந்தரத்திற்குள் போகும்படிதான் அனுப்பிக்கொண்டிருந்தார்.

ஆனாலும், தேவன் அவர்களை முழுவதும் கைவிட்டுவிடவில்லை. 40 வருடங்களாகத் தினமும் மன்னாவைப் புசித்தார்கள்; நல்ல நீரைக் குடித்தார்கள்.

அவர்களது செருப்புகளும் ஆடைகளும் கிழியவில்லை; பழையதாய் போகவும் இல்லை. 40 வருடங்களாக நடந்தும் அவர்கள் கால்கள் வீங்கவும் இல்லை. அவர்கள் வனாந்தரத்தில் தங்கின போதும் பாம்புகள், தேள்கள் போன்றவற்றாலும் எந்த வியாதியாலும் அவர்களுக்குத் துன்பமும் நேரிடவில்லை.



இப்போது மீண்டும் கானானின் அருகே அவர்கள் வந்துவிட்டார்கள். எனவே, குளிர்ந்த பள்ளத்தாக்குகளையும், பச்சையான வயல் வெளிகளையும் அவர்கள் பார்த்திருக்கலாம், ஆனால், இந்த மேன்மைகளை அவர்கள் எண்ணிப்பாராது எகிப்தை நினைத்தார்கள்.

“நாங்கள் எகிப்திலே எவ்வளவு நன்றாக இருந்தோம். எங்களை ஏன் இந்த வனாந்தரத்திற்குக் கூட்டிவந்தீர்? எங்களுக்கு நல்ல உணவும் தண்ணீரும் இல்லை. “இந்த ‘மன்னா’வையே சாப்பிட்டு சாப்பிட்டு எங்களுக்கு வெறுத்துப்போய்

## மனன வசனம்

**தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாயிருங்கள்.**
**மாற்கு 11:22.**

விட்டது'' என்று மோசேயிடம் முறுமுறுத்தார்கள்.

'தேவன் தங்களை எவ்வளவு அற்புதமாய்ப் பாதுகாக்கிறார்' என்று பார்க்காமல், அதிருப்தியாய் இருந்தார்கள். தேவனையே குறைகூறினார்கள்.

இவர்களது குற்றச்சாட்டுகளையே கேட்டுக்கேட்டு மோசே அலுத்துப்போய் இருந்தார். தேவன் அவர்களை வழி நடத்தி வந்தார். மேலான காரியங்களைஅவர்களுக்கு மேலும் விளக்கிச்சொல்ல விரும்பினார்.

ஆனால், அவர்களோ அதையெல்லாம் கவனிப்பதாக இல்லை. தேவனது பாதுகாக்கும் கரம் அவர்களுடன் இல்லாவிட்டால் என்னவாகும் என்பதை அவர்களுக்குக் காட்ட தேவன் விரும்பினார்.

அந்த வனாந்தரத்தில் நச்சுப் பாம்புகள் அதிகம் இருந்தன. இஸ்ரவேலரைக் கடிக்குமாறு அவைகளுக்கு தேவன் உத்தரவு கொடுத்தார். பாம்புகள் கடித்த போது உடனே அவர்கள் இறந்தார்கள்.

''ஐயோ, நாங்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்ததால் பாவம் செய்தோம்; தேவன் எங்களை மன்னிக்குமாறு ஜெபியும்'' என மோசே யிடம் கெஞ்சி அழுதார்கள்.

மோசே தேவனிடம் கெஞ்சினார். அப்போது, தேவன் வெண்கலத்தால் ஒரு பாம்பைச் செய்து, அங்கே நிறுத்தச் சொன்னார். பாம்பு கடித்த நபர் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கவேண்டும். அவ்வாறு பார்த்தால், பிழைப்பார்கள் என்றார்.

தேவனின் வார்த்தையை நம்பி, அந்த வெண்கலச் சர்ப்பத்தைப் பார்த்தவர்கள் பிழைத்தார்கள். நம்பாமல், அதைப் பார்க்காதவர்களே செத்தனர்.

இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் தங்கியிருந்த இடங்களில் கொடிய நச்சுப் பாம்புகளும் தேள்களும் ஏராளமாக இருக்கத்



## செய்தி

**தேவனை நாம் விசுவாசிக்கும்போது நாம் தேவனைத் தொழுகிறோம்.**

தான் செய்தன. அவைகளுக்கு மத்தியில்தான்இஸ்ரவேலர் அங்கு நடமாடிக்கொண்டும் இருந்தார்கள்.

ஆயினும், அவைகள் இஸ்ரவேல் மக்களுக்கு எந்த ஒரு தீமையையும் செய்யாதபடிக்கு தேவன் அவைகளின் வாயைக் கட்டியிருந்தார்.

அதே போன்று சிலுவையில் நமக்காக உயர்த்தப்பட்ட இயேசு ராஜாவை நாம் நோக்கிப் பார்த்தால் பிழைப்பது நிச்சயம். நோக்கிப் பார்ப்போமா? தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருப்போம். தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருக்க வேண்டும் எனும் பாடத்தை இஸ்ரவேலர் கற்றுக்கொண்டார்கள். நாம் எப்போதும் தேவனிடத்தில் விவாச முள்ளவர்களாயிருக்கவேண்டும்; அப்போதுதான் நம் தேவனுக்குச் சந்தோஷமாயிருக்கும். நாமும் சந்தோஷமாக இருக்கமுடியும். தேவனை நாம் விசுவாசிப் போமா?

### செய்முறை

*இஸ்ரவேலர் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் ஒன்று இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. கோட்டின் மேலே மாறிக்கிடக்கும் எழுத்துக்களை முறைப்படி ஒழுங்குப்படுத்தி, கீழே உள்ள கோட்டில் எழுதுக.*

வ ல் த் தே னி ட தி

____________

வி ச ம் சு வா

____________



உ ய் வ ள் ள னா

____________

இ க் க ரு

____________

வே டு ண் ம்

____________